**17.02.2026**

**O.S.No.142/2012**

**பி.வா.சா.2 : கோவிந்தராஜ்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) சாட்சியம் சொல்வற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. ராஜேந்திரன் கேட்டுகொண்டதற்கு இணங்க தான் சாட்சி சொல்ல வந்தேன். ராஜேந்திரன் எனது நண்பர் என்றால் வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் உறவினர்கள் தான். நாங்கள் இருவரும் ஒரே சமூகத்தினர் சார்ந்தவர்கள் தான் என்றும் இருவரும் உறவினர்கள் அல்ல என்றும் நாங்கள் உறவினர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள முல்லைவாடி ரங்கசாமி தெருவில் உள்ள வீட்டின் சர்வே எண் மற்றும் சொத்து விவரத்தை சொல்லவில்லை. வாதியின் அப்பாவும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த பாகப்பிரிவினை மற்றும் அவர்கள் குடும்பத்தில் நடந்த விசயங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1946ல் முகமது ஜமாலுதின் சாகிப் என்பவரிடம் இருந்து வாதியின் தாத்தா கடன் வாங்கி அடைமானம் பத்திரம் பதிவு செய்து எழுதி கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த கடனை அடைக்கும் வரை அந்த இடத்தை அனுபவித்து கொள்ளுங்கள் என்று சொல்லிய விவரம் எனக்கு தெரியாது.

2) தாவா சொத்திற்கு பக்கத்தில் ராஜீ வாத்தியார் என்பவரின் தம்பி வீட்டில் குடியிருந்ததாக சொல்லியுள்ளதில் ராஜீ வாத்தியார் என்பவரின் தம்பி பெயர் தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் ராஜீ வாத்தியார் என்பவரின் வீட்டில் குடியிருந்ததாக சொல்விட்டு மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல ராஜீ வாத்தியார் என்பவரும் இல்லை அவருடைய தம்பி அங்கே இல்லை என்றும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே காட்டில் வீடு கட்டி போய் விட்டார் என்றால் சரியல்ல. தற்போது வாதி தான் வழக்கு சொத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

3) தற்போது வாதி தான் தாவா சொத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 40 வருடத்திற்கு முன்பாக 3 கூரை வீடுகள் இருந்தது தற்போது இல்லை. நான் சொல்வது போல அங்கு 3 கூரை வீடுகள் இருக்கவில்லை என்றும் அங்கு வாதியின் வீடு தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி செல்வம் என்பவரை எனக்கு தெரியும். அவரின் அப்பா பெயர் தான் ராமு நாயுடு.

4) அவரிடம் எனக்கு வரவேண்டிய சொத்தை எனக்கு கொடு என்று கேட்டு கொண்டேன் என்றும் அதற்காக தான் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையை தான் சொல்லி உள்ளேன். 1975 ல் இருந்து வேணுகோபால் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார். நான் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.17 22:53:22 +0530

**Subordinate Judge, Attur.**